**இந்தியா பௌண்டேசன் பார் தி ஆர்ட்ஸ் (ஐ.எஃப்.ஏ.)**

**தன் கலைப் பயில்வுத் திட்டத்தின் கீழ்**

**தயாரிப்புகளுக்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது**

**விண்ணப்பிக்கக் கடைசி நாள்:** Friday, June 09, 2023

கலைப் பயில்வுத் திட்டம் (Art Practice Programme) கலைஞர்கள் தங்களின் தற்போதைய பயில்வுகளின் வீச்சுக்களை, பரப்பெல்லைகளைப் புதிய நோக்கில் விரிவுபடுத்த உதவும் வேலைத்திட்டங்களைச் (projects) செயற்படுத்த முற்படுகின்றது. இத்திட்டங்கள் மரபாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளைக் கேள்விக்குட்படுத்துவதாகவோ, வடிவம், உள்ளடக்கம், ஊடகம் போன்றவற்றில் புதிய எல்லைகளை நகர்த்தக் கூடியதாகவோ, வெளி, பார்வையாளர்கள், சமூகங்கள் ஆகியவற்றின் மீதான ஈடுபாடுகளில் புதிய அணுகுமுறைகளைக் கண்டறியக் கூடியதாகவோ, சோதனை முயற்சிகளை வெளிப்படுத்தக் கூடியதாகவோ அமையலாம்.

**தயாரிப்புகள்:**

தாங்கள் ஏற்றுக்கொண்ட, பெற்றுக் கொண்ட அணுகுமுறைகளை கேள்விக்குட்படுத்துவதன் மூலமும் (அத்துடன் / அல்லது) தங்களின் கலைப்படைப்புக்களை உருவாக்குதல், அவற்றை அளிக்கை செய்தல் தொடர்பான புதிய சாத்தியப்பாடுகளைக் கண்டறிதலின் மூலமும் தங்களின் கலைப்பயில்வுகளை மறுவாசிப்பு செய்ய அல்லது மீள்கற்பனை செய்ய விரும்பும் போது கலைஞர்கள் தங்களுடைய சொந்தக் கலைப்பயணத்தில் ஒரு புள்ளியில் வந்து நிற்கக் கூடும். அத்தகைய தேடலானது (கலைஞர்களின்) ஆராய்ச்சி மற்றும் பரிசோதனையின் ஆன்மாவை உருவகப்படுத்தக் கூடிய தயாரிப்புக்களாகவும் படைப்பாக்கங்களாகவும் வெளிப்படலாம்.

கலைப்பயில்வுத் திட்டத்தின் கீழ், அத்தகைய தேடுதல்களிலிருந்து உருவாகக் கூடிய கலைத் தயாரிப்புகளுக்கான வேலைத்திட்ட முன்வரைவுகளை வரவேற்கிறோம். இத்திட்டங்கள் ஆற்றுகை (performative), கேட்பியக்கலை (aural), காண்பியக்கலை, டிஜிட்டல் (digital), இலக்கியப் படைப்புகள் அல்லது இவை போன்ற வடிவங்களை உள்ளடக்கக்கூடிய பல்துறைசார் படைப்புக்களைக் கொண்டதாக அமையலாம். நாடகம், நடனம் மற்றும் இசை நிகழ்த்துகைகள், நிறுவல், கண்காட்சி, புத்தகம், சிற்றேடுகள் போன்ற பிற பதிப்புகள், திரைப்படம் மற்றும் நகரும் படிம அளிக்கைகள் (moving image presentations), விளையாட்டுகள், இண்ட்டர்பேசஸ் (interfaces) உள்ளிட்ட பிற டிஜிட்டல் கலைப்படைப்புக்கள், இன்னும் கற்பனை செய்யப்படுகின்ற பிற படைப்பாக்க வடிவங்கள் போன்றவை குறித்த வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

**திட்டத்தின் கால அளவு**: 18 மாதங்கள் வரை
**வரவுசெலவுத் திட்ட அளவு**: அதிகப்படியாக ரூபாய் 5,00,000/- வரை
**விண்ணப்பிக்கக் கடைசி நாள்**: Friday, June 09, 2023

**யார் யாரெல்லாம் விண்ணப்பங்களை அனுப்பலாம்?**

ஒரு கலைப்புலம் சார்ந்தோ அல்லது பல்வேறு புலங்களின் ஊடாகவோ இயங்குகின்ற கலைஞர்களிடமிருந்து இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

- இசை, ஒலி, பனுவல், நடனம், உடலியக்கம், நாடகம், பாவைக்கூத்து, கதைசொல்லல், மாயவித்தை (magic), சர்க்கஸ், இன்னும் பிற நிகழ்த்துக்கலைகள் சார்ந்த நிகழ்த்துக்கலைஞர்கள்.

- திரைப்படம் (ஆவணப்படம் மற்றும் புனைவுப்படம்), சலனச் சித்திரம் (animation), புகைப்படம், நிறுவல் கலை (installation), புது ஊடகக் கலை (new media), செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், ஊடாட்டக்கலைகள், மின் ஊடக விளையாட்டு (gaming), ஓவியம், சிற்பம், அச்சுக் கோர்த்தல், சித்திரப் புத்தகம், வரைகலை படக் கதைகள், கலைஞர் புத்தகம் இன்னும் பிற காண்பியக் கலை வடிவங்கள் சார்ந்து இயங்கும் காண்பியக் கலைஞர்கள்

- கலைக்காட்சிக் கூடங்களுக்கு வெளியே இயங்கும் எடுத்தாளுனர்கள் (curators).

- இலக்கியப்படைப்புகளுடன் இயங்கும் கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள், நாடக ஆசிரியர்கள்

- பல்துறைப் படைப்பாக்கங்களில் ஈடுபட்டுள்ள கலைப்பயிற்றுநர்கள், கலைஞர்கள்

உங்களின் திட்ட முன்வரைவுகளில்

- ஒரு கலைஞராக உங்களின் தற்போதைய கலைப்பயில்வு, அக்கறை, விருப்பங்கள்
- நீங்கள் படைப்பாக்கம் செய்யவிருக்கின்ற கலைத்தயாரிப்பு குறித்த விபரங்கள், இக்கலைத்தயாரிப்பில் நீங்கள் ஈடுபடுவதற்கான காரணம்
- விரிவான வரவுசெலவுத் திட்ட அறிக்கை, திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காலவரிசை விபரங்கள்
- முந்தைய படைப்புகள் - சான்றுகள்
- உங்களின் முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் உள்ளிட்ட விபரங்களுடனான தன் விபரக்குறிப்பு

ஆகியனவற்றை விளக்கி அனுப்புங்கள்.

**தேர்வு செய்யப்படும் முறை**:

தேர்தெடுக்கப்பட்ட திட்ட முன்வரைவுகள் புறத்தேர்வாளர் குழுவினரால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் இக்குழுவினரின் முன்னிலையில் தங்களின் திட்டம் குறித்த எண்ணங்களை அளிக்கை செய்ய வேண்டும். செயலாக்கத்தின் பொருட்டுத்

தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட முன்வரைவுகள் ஆகஸ்ட் **September 2023** அறிவிக்கப்படும். இத்தேர்வில் ஐ.எஃப்.ஏ.வின் முடிவே இறுதியானது.

**திட்ட முன்வரைவுகளைச் சமர்ப்பித்தல்:**

- ஆங்கிலம் உட்பட எந்த இந்திய மொழிகளிலும் உங்களின் திட்ட முன்வரைவுகளை எழுதலாம். ஆங்கிலத்தை விட, பிற இந்திய மொழிகளில் திட்ட முன்வரைவுகளை எழுத ஐ.எஃப்.ஏ ஊக்கப்படுத்துகின்றது.

- திட்ட முன்வரைவினை அனுப்புமுன்னர், அதைப் பற்றிய உங்களின் கேள்விகளையும் எண்ணங்களையும் எங்களுடன் விவாதிக்க விரும்பினால், சுமனா சந்திரசேகரை sumana@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரியில், **May 19, 2023** க்கு முன்னதாகத் தொடர்பு கொள்ளலாம்.

உங்களின் இறுதித் திட்ட முன்வரைவுகளை, அனைத்துத் துணை ஆதாரங்களுடன், இணைய வழியாக 25 MBக்கு மிகாமல் ஒரே மின்னஞ்சலில், சுமனா சந்திரசேகருக்கு sumana@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரியில், **Friday, June 09, 2023** அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ, அனுப்பி வைக்க வேண்டும்.

முழுமையடையாத திட்ட முன்வரைவுகளும் தகுதி வரன்முறைக்குள் வராத அனைவரின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ள வேண்டுகின்றோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்துத் திட்ட முன்வரைவுகளும் ஐ.எஃப்.ஏ.வினால் செயல்படுத்தப்படும்.

கலைப் பயில்வுத் திட்டம் சோனி பிக்சர்ஸ் என்டர்டெயின்மென்ட் ∴பண்டின் துணையுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## தகுதி வரம்பு

இந்தியா ஃபவுண்டேஷன் ஃபார் தி ஆர்ட்ஸ் (ஐ.எஃப்.ஏ) அதன் பல்வேறு திட்டங்களின் கீழ் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டங்களின் கீழ் விண்ணப்பிப்பதற்கான தகுதிக்கான அளவுகோல்கள் பின்வருமாறு:

- இந்திய குடிமகன் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இதில் (இந்திய வம்சாவளியினர்) மற்றும் (இந்திய வெளிநாட்டு குடிமக்கள்) அட்டை வைத்திருப்பவர்கள் அடங்காது.
- விண்ணப்பதாரர்கள் பான் கார்டு மற்றும் அடையாள மற்றும் குடியுரிமைக்கான சான்றுக்கு பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றை வைத்திருக்க வேண்டும் - இந்திய பாஸ்போர்ட் அல்லது ஆதார் அட்டை அல்லது இந்தியாவில் வாக்காளர் அடையாள அட்டை.
- தனிநபர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். எந்த வகையான நிறுவனங்களும் விண்ணப்பிக்க முடியாது.
- திட்டங்களில் ஒத்துழைப்பாளர்கள் இருந்தால், அவர்களும் இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டும்.
- உடனான நிதிக் குற்றங்களின் கடந்தகால வரலாற்றைக் கொண்ட நபர்கள் தகைமை பெறமாட்டார்கள்.
- முந்தைய மானியத்திலிருந்து ஒப்புக்கொள்ளப்பட்ட டெலிவரிகளை இல் டெபாசிட் செய்யத் தவறிய நபர்கள் தகுதியற்றவர்கள்.
- எந்தவொரு காரணத்திற்காகவும் எதிர்காலத்தில் விண்ணப்பிப்பதில் இருந்து தங்களை அனுமதி மறுத்த ஐ.எஃப்.ஏ.விடமிருந்து முன்னர் ஒரு கடிதத்தைப் பெற்ற நபர்கள் தகுதியற்றவர்கள்.
- கூட்டுக் கணக்கு வைத்திருந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட தனிநபர்கள் விண்ணப்பிக்கலாம். அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், அவர்களில் ஒருவர் மட்டுமே மற்றவர்களுடன் ஒத்துழைப்பாளர்களாக விண்ணப்பிக்க வேண்டும்.